ஓலை 31 | ஓசை 124 | சனவரி 2023

# அகர முதல இலக்கிய பேரவை

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# தினம் ஒரு குறள்



**அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு.**

அருமையான உயிர்க்கு உடம்போடு பொருந்தி இருக்கின்ற உறவு, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன்என்று கூறுவர்.

**Translation:**

Of precious soul with body's flesh
and bone,
The union yields one fruit, the
life of love alone.

**Explanation:**

They say that the union of soul and body in man is the fruit of the union of love and virtue (in a former birth).

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

**நிர்வாக குழு**

**கு.செல்வமுத்துக்குமரன்**

**சிவம் அறக்கட்டளை**

**ஆசிரியர்கள்**

**அ.வில்சன்**

**குமர.தர்மசீலன்**

**வடிவமைப்பு**

**அ.வில்சன்**

## அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,**
**மயிலாடுதுறை - 609001**


## அகர முதல இலக்கிய பேரவை


Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# வீரம் விளையும் வாடி வாசல்



சங்கத் தமிழனின் வீரச்செயல்
தை மாதம் நடக்கும் தீரச் செயல்
தமிழர் பண்பாட்டின் அடையாள சின்னம்
காளைகளை ஓடவிட்டு
கொம்பை பிடித்து வீழ்த்தும் வீர விளையாட்டு
உலக அளவில் சிறப்பு வாய்ந்தது
ஆண்டுத் தோறும் இவ்விழாவைக் காண
ஏராளமானவர்கள் படைத் திரண்டு வருவாரே
மாடு பிடி வீரர்களுக்கு பரிசு
ஒவ்வொரு முறையும் சொல்லி சொல்லி அழைப்பது சிறப்பே
எங்க தமிழ்நாட்டில் பிறந்தவனுக்கு
வீரம் தானாக வருமே
சேர்ந்து இருந்தாலே தமிழ் பண்பாடும்
கூடவே வருமே
பல்லாண்டு காலமாக புலவர்கள்
அரசர்கள் மன்னர்கள் வாழ்ந்த பூமிடா
கல்லில் செதுக்கிய சிற்பமும் தமிழனின் வாழ்வை பேசுமே
ஜல்லிக்கட்டை தடைச் செய்ய போராட்டம் வெகுண்டு எழுந்ததே
சாதித்து காட்டி சரித்திர வரலாற்றில் ஜல்லிக் கட்டையும்
பார்த்து விட்டான் தமிழன்
வாடிவாசல் சீறிப்பாயும் காளை
அடக்க புலிப்போல பாயும் காளையர் கூட்டம்
எங்களுக்கு உயிரோட்டம் கொடுத்தது தாய்பாலாடா
ஆடிடுவோம் வருடந்தோறும் வெற்றியைத் தேடிடுவோம்
மறத்தமிழன் ஆடும் விளையாட்டு
தலைமுறை
தலைமுறையாய் கண்ட விளையாட்டு
வீரத்திற்கும் விளைச்சலுக்கும் பெயர் போனவன் தமிழன்
தலை நிமிர்ந்து வாழ்ந்து காட்டி வென்றிடுவான்

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# புற்றுநோயைப் புரையோடவிடலாமா?

வருங்கால பாரதத்தை
வடிவமைக்கும் சிற்பிகளே!
சிற்பிகளின் சிந்தனையில்
சீர்கேடு ஏற்பட்டால்
சிற்பம் என்னவாகும்?
சிந்திப்பீர் இக்கணமே!.

கல்லாத பெற்றோரும்
தம்பிள்ளை கற்றிடவே
கல்லூரிக் கனுப்பிவைப்பர்!
கற்றிடச் சென்ற பிள்ளை
பெற்றனன் சிலரால் தொல்லை!




மூத்தமாணவர் மொழியும்
அத்தனையும் இளைய மாணவர்
ஏற்றிடல் வேண்டுமாம்!
தனிமனித சுதந்திரத்தைத்
தட்டிப் பறிக்கும்விதம்
எழுதப்படாத சட்டமிதை
இயற்றியவர் யாரோ?

உடலாலும் உள்ளத்தாலும்
உற்ற துன்பத்தால்
படிப்பதை விட்டுவிட்டு
ஓடினர் பலபேர்!

மனத்துயர் அதனால்
மாண்டனர் சிலபேர்!
பெற்றவர் பலர் கனவு
பிழையாகிப் போனதென்ன!

ஏனிந்த இழிசெயல்கள்
’ராகிங்’ எனும் பெயரால்?

புற்றுநோயான இதைப்
புரையோட விடலாமோ?
வேரறுப்போம் இதை
மாணவர் சமுதாயம்
மறுமலர்ச்சி பெற்றிடவே!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# புலால் மறுத்தல்

(அதிகாரம் : 26)




பிறஉயிர் கொன்று
அத்தசை தின்பது.
பெரும்பாவம் என்றறிந்து
அச்செயல் களைந்திடு.

தன்தசை பெருக்கிட
பிறதசை அறுத்து.
உண்பவன் எங்ஙனம்
அருளுடையோன் ஆவான்.

பொருட்செல்வம் காவாதார்
பொருளுடையோராகும் தகுதியற்றோர்.
புலாலுண்போர் ஒருபோதும்
அருளுடையோராகும் தகுதியற்றவராவர்.

உடற்சுவையை ருசித்தார்மனம்
கொலைக்கருவி ஏந்தினாரின்.
கொடூர நெஞ்சம்போல்
அருள்செய்தலை நினையாதிருக்கும்.

உயிர்க்கொல்லாமையே அருளாகும்
கொல்லுதல் அருளற்றதாகும்.
அவ்வுடலை உண்டுகளித்தலோ
அறமற்ற வன்செயலாம்.

நல்லுயிரின் நிலைவாழ்வு
ஊன் உண்ணாமையிலிருக்கும்.
புலால் உண்பவனை
நரகம் மூடியடைக்கும்.

ஊனுண்ணும் பொருட்டு
உயிர்களைக் கொல்லாதிருந்தால்.
விலையின் பொருட்டு
ஊன் விற்கப்படமாட்டாதுவே.

பிறிதோருயிரின் புண்ணே
புலால் என்றறிந்தவன்.
அவ்விழிநிலைச் செயலகற்ற
ஊனுண்ணாதிருத்தல் நலமே.

அறிவும் அருளுமுடையோர்
தீயில் நெய்சொரிந்து.
வேள்வி இயற்றுதலைவிட
ஊனுண்ணாமை நன்றென்றறிவர்.

உயிர்களைக் கொல்லாமலும்
ஊன் உண்ணாமலுமிருப்போரை.
உயர்ந்த பண்பாளனென்று
உலகம் கைகூப்பிப்போற்றும்!

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# என்னைச் செதுக்கியச் சிற்பி!

தந்தையில் விந்தணுவால்
தாயின் கருவறையில்

தஞ்சம் அடைய மரபணுவழி
உடலின் உறுப்புகள் செதுக்கிட

தாயின் ஈடற்றத் தியாகத்தால் வளர்ந்தேன்
என் அயர்வில்லாத
தொடர்முயற்சியால், பிறந்தேன்.

தாயின் வயிற்றில் தாயின்
எண்ணத்தை எனக்குள்ளே
விதைத்து, பிறந்து என்
முயற்சியால் நடைபயின்றேன்.



தாயின் அரவணைப்பு,
தந்தையின் நம்பிக்கைப் பேச்சு
கற் பாறையான என்னைச்
செதுக்கத் தூண்டியது.

ஆசானால் பள்ளியில்
கசடறக் கற்ற கல்வி,
என்னுள்ளே வாழ்வின்
நுணுக்கத்தைச் செதுக்கியது.

சுற்றி வாழ்ந்தோரின்
பட்டறிவுப் பாடங்கள்
வாழ்வின் ஏற்றத் தாழ்வில்
வாழ்ந்திடும் முறை
இதுவும் கடந்திடும் என்ற
பற்றற்ற நிலையைப் புகுத்தியது.

விரைந்து என்னைச் செதுக்கி
இசை பட வாழும் சிலையாக்கியது .
சிலையானதும் என்னுள் எழுந்தது
ஆணவம்.

ஆணவத்தால் ஊனமாகாமல்
காத்திட உதவினான்,காலதேவன்.

காலதேவன் சொல் கேட்டு என்னை
நான் என்றும் புதுப்பிப்பேன்.

கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# இருத்தல்

இருள் கிழிய
அடிவானில் வெளிச்சமப்ப
பசியின் கரும்புள்ளியழிய
யுத்தம் துவங்கியதை
இனிதாய் இசைக்குமொரு
குயில்.

வாழத் தெரியாதவர்களும்
இயலாதவர்களும்
அடிமை விலங்கு அறுபட
விவாதப் பெருக்கில் விம்மியெழ
விதி நெருப்பு வீறிட்டெரிய
உலை கொதிக்கப் பட்டினி வயிறு
பசியடங்கப் பூரணமாய்
விடியுமந்த கிழக்கு.

தவணை முறையில்
செலுத்தினாலும் தீராது
அது ஆயுளுக்கும் அடையாது
கிழட்டுக் காற்றின் உயிர்க் கடன்.
அமைதியைப் பானமாக்கியருந்திய
காற்றற்ற இதயத்தில்
இனி இருக்காது ஓட்டைகள்.

போதையில் விழ்ந்தவனின்
மொழியும்
புத்தி பேதலிப்பில் வாழ்பவனின்
மொழியும்
ஒன்றில் ஒன்றாக
அவனைப் போல இவனும்
இவனைப் போல அவனும்
இருக்கின்றன வரை
ஆறாமறிவைத் துச்சமாக்கி
பைத்தியமாய் இருந்து கொள்ள
இரக்கமற்று இசைகிறது
இப்பாழ் உலகு.



அகர முதல

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# பதில் உண்டோ என் மனுவிற்கு!

கனவிலே உன் முகம் மறைவதில்லை
விடியலில் உன் முகம்
நிஜத்தில் இல்லை

ஏக்கங்கள் யாவும் என்னை
ஏங்கிட செய்யும் வேலை
உண்மைகள் யாதும் இங்கு
உயிர்பெற மறுப்பது உண்மை



நீ நான் என்ற விதி மாறி
நாம் என்றே வாழ்ந்தோம்
நாம் என்ற வழிதவறி
நீ நான் என மீண்டோம்

இது பிரிவா இல்லை தொலைவா
உன்னிடம் கேட்கிறேன்
இது முடிவா இல்லை முதலா
மீண்டிட நினைக்கிறேன்

சிறு கோபம் சிறு ஏக்கம்
வலி தந்து வடுவானது அன்று
யாவையும் நான் மறந்து
உனதானேன் இன்று
எனதாக நீ மாற
என்னை ஏற்றிடுவாயா

கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்(இலங்கை)

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# ஏக்கத்துடன் நான் (மரம்)

பச்சையாக இருந்த என்னை
பட்டமரமாக்கிய மானிடமே.
எனது மூதாதையர்களை வெட்டி
வீழ்த்தியதேனடா.
எனது கிளையில் குடியிருக்கும்
எனது பறவைகள் பரிதவிப்புடன்
பறப்பதைப் பாருங்கள்.

ஓஒ... மனிதனே!
எங்களை வீழ்த்தி உங்களுக்கு
நீங்களே அழிவைத் தேடி
கொள்கிறீர்கள் என்பதைக் கூட
அறியவில்லையே
என்பதை நினைத்து என் பட்டமரத்திலும்
பால் (கண்ணீர்) சுரக்கிறதே.

தாய் பறவை இரைத்தேட
என்னை நம்பி தன் குஞ்சுகளை விட்டுவிட்டு போகுமே
இதை அறிவீர்களா மானிடர்களே.
இதோ பாருங்கள் கிளையில்லாமல்
ஒரு சின்னஞ்சிறு பறவை
தன் தாய் வரும் வழியை பார்த்து
மடிந்த என் தாய் மீது அமர்ந்து கொண்டு
இருக்கும் நிலையை.

எங்களை அழித்து வளம் காணும் மானிடனே.
நீ உயிர் வாழ உனக்கு தேவை பொருளா?
யோசி.
உயிர் வாழ நீரும் சுவாசிக்க காற்றும்
தான் தேவை என்பதை அறிவீர்களா.
இயற்கையை அழித்ததால் படும்பாட்டை
கண்கூடாக கண்டீர்கள் அல்லவா.
இனியாவது எங்களை வாழவிடுங்கள்.
எங்களுக்காக இல்லையென்றாலும் உங்களுக்காக.

எனது ஆணிவேருக்கு உயிர் இருக்கும்
நாங்கள் மறுபடியும் தழைத்தோங்குவோம்.
நீங்கள் மனது வைத்தால் வைப்பீர்களா?
ஏக்கத்துடன் நான்.

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# நெஞ்சே எழு

நெஞ்சமே உன் உறுதி வேண்டும்
கொஞ்சமும் தளராது இது நிறைந்து
தஞ்சை கோபுரம் போல் நிமிர்ந்து

புயல் மழை  வந்த போதும்
புரட்சியே எதிர்கொண்டு நிற்கும்
வயலில் நாத்து போல் வளர்ந்து
வாலிப முறுக்கில் எதிர்கொள்ளும்

அச்சம் என்பது சிறிதும் இல்லாதது
நெஞ்சை உயர்த்தி கானம் பாடும்
காட்சியை இரும்பு குழம்பாய் கொதிக்கும்
அச்சில் வடித்த எழுத்தாய் வந்திடும்



என்னை அழைத்து முன் நிறுத்தும்
எண்ணங்கள் ஒன்றாய் இருந்தாபோதும்
எதிர்ப்புகள் இல்லா பொடி  ஆகும்
அதிலே இன்பம் பொங்கி பெருகும்

தூக்கம் வந்தாலும் வீரம் விழித்திருக்கும்
ஊக்கம் அங்கு கொடி பிடிக்கும்
நீரு பூத்த நெருப்பாய் இருக்கும்

வெற்றிவாகை சூடியே தினம்
வெற்றி திலகம் வைத்து வந்து
போற்றிப் பாடி எங்கும் கேட்டிட
ஏற்றிய தீபத்தின் ஒளியாய் எழுவோம்

கவிஞர் அஞ்சல் தஞ்சை தாசன்,மடிப்பாக்கம் 91

# மனிதத்தை வியக்கிறேன் நான்

பிறக்கையில் கண்ணீரோடு பிறக்கிறான்
இறக்கின்ற சமயம் தனக்கென கண்ணீர் வடிக்க
பிறரை சேமித்தவனாய் மறைகிறான்
வாழும்போது வயிற்றுப் பிழைப்புக்காய் உழைக்கிறான்
அதுவே வாழ்க்கை எனக் கண்டு பிறர் வயிற்றில் அடிக்கிறான்
சிரிக்கிறான் சிரிக்க வைக்கிறான்
நேசிக்கிறான் நேசிக்கப்படுகின்றான்
தீராத் தேடலில் தொலைந்து ஆற்றாமையில் கரைந்து
செய்த தவறினால் திடுக்கிட்டு விழுகிறான்
விழுந்தவன் மீண்டும் எழுகிறான், எழுந்தும் வீழ்கிறான்
மழலையாகி மனையாள் அவள் மடியில்
தன்னவளுக்கு கணவனாகி அவள் வயிற்றுப் பிள்ளைக்குத் தகப்பனாகி
வறுமையின் கோரப் பிடியில் வழிப்பறிக் கொள்ளையனாகி
நெஞ்சில் சுமக்கும் காதலுக்காய்
மனசாட்சி மறந்தவனாகி ஒரு கவலம் உணவுப் பிடிக்காய்
பிறர் பிடியில் இருந்து பணம் பறிப்பவனாகி
வறுமை கற்றுக் கொடுத்த பாடங்களில் கசக்கிப் பிழிந்த கந்தையாகி
கரைசேரா ஓடமாகி இறுதியில்
ஆதரவற்றோர் இல்லங்களில் அடைக்களமாகி
சேர்த்து வைத்த சொத்துக்கள்
சோற்றிற்கே வழியின்றி மீண்டும் வழிப்பறிக் கொள்ளையாகி
நன்றி மறந்த மனிதனாய் பெற்றெடுத்தவர்கள் மாற
இறுதிக் காலத்தில் சேய்த பாவங்களை உணர
மீண்டும் தொட்டில் பிள்ளையானால் என்ன
எனத் தோன்ற மதியிழந்தவனாகி
தள்ளாட்டத்தில் வெள்ளோட்டம் பார்ப்பவனாகி
கடந்து வந்த பாதை
கண்ணீராக இறைக்க
மண்ணறை நினைவுகள் நெஞ்சில் இறைக்க
காண்பவையெல்லாம் பொய்யெனத் தோன்ற
இறுதியில் தனியொருவனாகி தவிப்பில் வாடி
வாழ்க்கை வேண்டாம் என வெறுத்து
காணாமல் போன அழகிய கவிதையாம்
மனிதத்தை வியக்கிறேன் நான்



கவிஞர் சுமையா சத்தார்,நெல்லியகம(அனுராதபுரம்)

# கொஞ்சும் நெருப்பு

கருவினில் சுகமாய் தினம் உனைச்சுமந்து
ஆயிரம் கனவின் ஆசைகளை தூரம்தள்ளி
நானிருந்தேன் பலநாள் பத்தியங்கள் உண்ணாமல்
நாளொரு உணர்வுகள்தந்து எனக்குள் வளர்ந்தாய்
மலரினும் மெல்லிய பிஞ்சுபாதங்கள் உதைக்கும்வேளை
வலிகளும் உயிர்வரை போய்வர  மறந்தேன்

பௌர்ணமி நிலவுகள் பத்தினை  கடந்து
உன்முகம் காணும்
பிரசவநாளில் உதிரத்தில் நனைந்து
நாளொரு வண்ணம் வளரும் மொட்டாய்
வாசங்கள்வீசும் பூவாய்மாறி நாட்களும் ஓட



பருவத்தின் விளிம்பில் நிற்கும் உன்னிடம்
கள்ளப் பார்வையில் நஞ்சைவீசும் விழிகளின்
மொழிகளில் தடுமாறி விழாமல் இருக்க
வண்டுகளாய்  வந்துபழகும்
அத்தனைபேரிடமும் நெருப்பாகவேயிரு

உன்னை அடக்க நினைப்போர்க்கும்
அக்னிபிழம்பாகவேயிரு

வாய்மைகள் செயலிழக்கும் இடமெல்லாம்  வலிமைதந்து
அறியாமையெனும் மூடுபனியினை விரட்டும் சுடரொளியால்
மார்கழி குளிரையும் தனலாய்  முறித்தெழுந்து
உன்னைச் சார்ந்தவர்களுக்கு ஒளிதரும் தீபமாயிருந்து
அரவணைத்து போவாய்மகளே கொஞ்சும் நெருப்பாய்.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# என் ஜீவன் நீயே



உன் கண்ணில் கருவிழியாகவும்,
உன் கையில் கைரேகையாகவும்,
உன் இதயத்தில் இதயத்துடிப்பாகவும்,
மொத்தத்தில் உன்னில் உயிராக
நான் மட்டுமே வாழ ஆசை.

கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# விசாரிப்பதெப்படி?

வேலை முடிந்து
வீடு திரும்புகையில்
கண்களுக்குள் வரவேற்பு ஊற்றெடுக்கும்.
அருகில் வந்ததும்
கால்களை உயர்த்தி
ஆனந்த மழையில் என்னை நனைக்கும்.
கொஞ்சும் குரலில்
வெளியே அழைத்துச் செல்ல அடம்பிடிக்கும்.
காலை விழிப்பும் உறக்கமும்
கச்சிதமான நேரத்தில் அரங்கேறும்.
வெளியாள் வருகையில்
குரலை உயர்த்தி
வீரத்தை பறைசாற்றும்.
நன்றியுள்ள ஜீவனைப் பற்றி
என்னால் வளர்ந்தவர்களிடம்
முதியோர் இல்லத்தில் இருந்தபடி
விசாரிப்பதெப்படி?



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# பகவத்கீதையோ பைபிளோ

பகவத்கீதையோ பைபிளோ
பரஸ்பரம் பறைசாற்றுவது
பாசமும்,பற்றும்,பரிசுத்தமான
பாவிகளின் பரிசாரகனாக
பற்றுள்ள வாழ்க்கையிருக்கவே!



இனிய வரிகளில்
இனிய வார்த்தைகளில்
இனிய வாழ்க்கைக்காக
இனிய வழியில்
இனிதாக வாழ
இறைவன் இயேசு
இன்மக்களுக்கு
இலவசமாக பகிர்ந்த பைபிள்.

அன்பு வழியில்
ஆதரவு தர
இனிய மனதுடன்
ஈகை குணத்துடன்
உண்மை பத்தரை
ஊரறிய
எளியோரை
ஏற்றம் பெற செய்ய
ஐந்தருளிய
ஒப்பற்ற
ஓர் இறைவன்
இயேசு பிரான்.

அரவம் இல்ல உருவமவன்
அறத்துக்கு எதிரான போரில்
அழிவை அகற்ற பிறந்தானே
பிரான் இயேசுவே!
இல்லை என்பதே
இல்லாமல் செய்யவே
இயேசுபிரான்
இளந்தளிராக
எழுந்தருளிய
இன்னாளும்
பொன்நாளாகும்.

மாற்றமுள்ள
மனிதர்களின்
மார்கழி திங்களில்
திருப்பள்ளி எழுச்சி
திருமாலுக்கு மட்டுமல்ல
திருவருள் புரியும்
திருஇயேசுவுக்கும்தான்!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# முதல் மாந்தன் தமிழனே!



தமிழன் என்றோர் இனம் உண்டு
தனியே அவனுக்கு ஓர் குணமுண்டு
முதல் மாந்தன் தமிழனே முதல்வன்
தரணிக்கு அவனே மூத்த புதல்வன்
லெமூரியா கண்டத்தில் அவன் பிறப்பு
குமுகாயத்தில் அவனுக்கு தனிச் சிறப்பு
அமுதமாய் அவன் பேசினான் செம்மொழி
அமுத மொழிக்கு இணை எம்மொழி?
வாழ்வை வீழ்வை இலக்கியமாய் கொண்டான்
இலக்கு கொண்டு வாழ்வை வென்றான்
கல்லை உரசி சமைத்துத் தின்றான்
நாகரிகம் பண்பாட்டில் முதலில் நின்றான்
இலக்கியம் வகுத்தே இலக்கணம் புகுத்தினான்
அகம் புறம் என்ற இலக்கியம் வகுத்தான்
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பலை வளர்த்தான்
யாதும் ஊரே யாவரும் கேளிர் என
பாருக்கே முன்னோடியாய் அன்பை அளித்தான்
மருந்தே ஆயினும் விருந்தோடு உண்டான்
நஞ்சும் உண்டு நாகரிகம் காத்தான்
வறுமை வாழ்விலும் செழுமையாய் பூத்தான்
மானம் அழிந்தால் உயிரை நீத்தான்
தானம் தந்தே வள்ளலாய் மிளிர்ந்தான்
பிறர் மகிழ்வில் நெஞ்சம் குளிர்ந்தான்
தனித் தமிழனாய் உலகில் ஒளிர்ந்தான்

கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# ஜென் கவிதை

மண்ணின் மேலிருக்கும்
கல்லின் அடியில் எத்தனை விதைகளோ?
மழை வெள்ளத்தின் வருகை
கல்லை நகர்த்தும் பொழுது
விதைகள் துளிர்க்காமல் இருப்பதில்லையே!
துளிர்விட்டு பெரிய மரமாக வளராமல் இருப்பதில்லையே!
பெரிய மரமாக வளர்ந்தாலும்
நிழல் கொடுக்காமல் இருப்பதில்லையே!
அதே சிறுகல்லுக்கும் சேர்த்து
கல் எப்படி வளரும்?
கல் எப்படி வளரும்?



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# தூரமில்லை வானம்

தூரமில்லை வானம்
தூங்காதே மனமே
தேசங்கள் தாண்டி
தேடவேண்டும் வெற்றி
மாயங்கள் நிகழும்
மறவாதே மனமே
மாதவம் செய்திடவே
மண்ணுலகம் சொர்க்கமே
முயற்சியெனும் முற்படுக்கை
முன்னேறும் தலைக்கிரீடமாக
முடியாதது ஒன்றுமில்லை
முழுமனதோடு ஓடு மனமே
மானிட வாழ்வுதனில்
மேடுபள்ளம் வந்தாலும்
மடைதிறந்த வெள்ளமெனவே
மன்றாடு தினந்தினமே
அலைகள் என்றாவது
அடிக்காமல் ஓய்ந்ததுண்டா
சூரியன் என்றாவது
எரிக்காமல் போனதுண்டா
பூமியின் சுழற்சியில்
மாற்றங்கள் இல்லை
தொடரும் முயற்சியில்
தொய்வுகள் இல்லை
இலக்கை நோக்கி
எட்டுக்கள் வைத்திடு
தியாக உணர்வோடு
சோதனைகள் பொறுத்திடு
வெற்றி நிச்சயம்
வீரியம் வெல்லும்
தட்சணையாகக் கரங்களில்
வானமே வசப்படும்.



கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# சூரியன் விடு தூது!

ஆதவனே, ஆயிரங்கரம் கொண்டவனே, உத்தமனே,
அவனியை வாழச்செய் பவனே புண்ணியனே,
காசியபர் அதிதி புத்திரனே, புகழுடையோய்,
கன்னன் யமன் சனீஸ்வரன் தந்தையே
சந்தியா சாயா தேவியரின் துணைவனே
சங்கு சக்கரம் ஏந்தும் ஆதிதேவனே
சிலம்புச் செல்வி கண்ணகி கட்டளைக்குப்
பணிந்து கோவலன் கள்வனல்லன் என்றமெய்ப்
பகர்ந்து பின்னும் மாமதுரையை எரித்ததவா,
அனுமனுக்குக் குருவாகி அறிவூட்டிய தேவா,
அரக்கன் இராவணனை வீழ்த்த அருள்வேண்டிய
அயோத்தி இளவரசன் இராமனுக்கு அருள்புரிந்தவா,
தோன்றா துணையே, இருளை நீக்குபவனே,
தீந்தமிழ் திருமலைக்குமரன் யானுமுனைப் பணிந்தேனே!



தென்திசைப் பயணம் முடித்து நீயும்
தரணி செழிக்க வடதிசைப் பயணம்
தொடங்கினாய் தைமுதல்நாள் எனவறிந்த அடியேனுக்குத்
தூயவனே உனைப் பணிந்து சொல்லவோரு சேதியுண்டு!
அடியேன் சொல்லுமந்த செய்தியைச் செவிமடுத்து
அன்பன் எந்தன்மீது நீயும்தயைக் கொண்டு
வடக்கில் செல்கையிலே வடவமெரிக்க கண்டத்திலே
வளங்கொழிக்கும் நாடாம் கனடாவழி செல்கையிலே
என்னிளங் குமரனைக் குகனைக் கண்டவன்
எப்படி இருக்கிறான் அங்கென நான் கேட்டதாய்
நீயும் பொறுமையாகச் சொல்லவேண்டும் அவனுக்கு;
நற்றமிழ்ச் சொல்லெடுத்து நயம்படநீயுரைத் தால்கேட்பானவன்!

கவனமுடனவனை நானிருக்கச் சொன்னதாய்ச் சொல்லவேண்டும்!
கவலை விட்டொழித்து உற்சாகம் கொண்டிடச்சொல்!
ஊக்கமுடன் உழைத்திடச்சொல்; உறவாமெம்மை மறவாதிருக்க
உயர்ந்தோனே அவனுக்கு எம்மன்பை எடுத்துச்சொல்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# குக்கூ

## குக்கூ

நடை தள்ளாடி
நகக் கண்கள் தேய்ந்த
பயணத்தில் இனிக்கிறது
மான் கேளா
ஒரு சீதையின்
வனவாசம்



## பழமொன்றியூ

ஐந்தில் வளையாதது
ஐம்பதில் வளையாது
துணை எனும் கைத்தடி
எண்பதிலும் வளையாது

## எதுகைக் கூ

விட்டுவிடாப் பிடிகள்
எட்டு வைத்த நடையுடன்
பட்டுப் போகா வயோதிகம்

## மோனைக் கூ

இருவரின் பாதங்கள்
இணைந்தே செல்கின்றன
இருப்புப் பாதைகள்

## விடுகவிக் கூ

பாரம்பரிய விழுது
தொட்டுத் தொடர்கிறது
தாம்பத்தியம்

## மணிக் கூ

கிழிந்த மலர்கள்
காற்றின் பயணத்தில்
பறிக்கப்படாமல்

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# தவிப்பும் தவிர்ப்பும்




கவிஞர் கீர்த்தனா பு,பாரதியார் பல்கலைக்கழகம்,பெருந்துறை

# விடையில்லா எதிர்காலம்

நடத்தையில் நன்றாக இரு என்ற
நல்லோர் பலர் கூற
அரியதாய் கிடைத்திட்ட பிறவியிலும்
அறியாது நடக்கின்றனரே மாந்தரும்!

செய்யும் செயலில் நேர்மையைக் கையாளக் கூற
அவசர யுகத்திலே கையூட்டுகளில் மிளிர்ந்து
நடை போடுதே இக்காலமும்!
பிறருக்கு உதவிடும் காலமதுவும் அருகியே
ஏளனமாய் நடத்திடும் நிகழ்வுமிங்கே அரங்கேறுதே!

எப்போது கீழ்விழுவானென்று வேவு பார்த்து
முதுகினில் குத்த காத்திருக்கும் அறிவிலிகளும் நிறைந்தனரே!
கடிவாள குதிரையாய் மனஞ்செலுத்துவோரையும்
சோர்ந்து போகும்படி பொய்மையையும்
உண்மையாக்குகின்றனரே!

இயன்றமட்டும் ஈகை செய்
வாழும்போதே காணும் சொர்க்கம்
இதுவே மெய் எனும் கூற்றை உணர மறுக்கின்றனரே!

இனிப்பு வார்த்தைகளோடு வலம் வா
இரண்டு கைகளிலும் நிறைய தா
என்னும் வார்த்தைகளை துறந்து
பிறர் மனம் கோணச் செய்கின்றனரே!

பத்தோடு பதினொன்றாய் வலம் வர வைத்து
வெற்றிக்கனிதனை எட்ட விடாது பதறவைக்கின்றனரே!
நெஞ்சில் ஈரம் இல்லாது நல்லன கூறுவோரை
பொய்யனாக்குகின்றனரே!
இவ்வுலகு எப்போதும்
உன்னையே கவனிக்கும் கவனம் கொள்!



இறைவனின் அன்புக்கு பாத்திரமாகு
நல்வழிப் பாதைதனை நேர்மையாய் நடத்து!
என்று தனக்குத் தெரிந்த அறிவுரைகளை
பிறருக்கு உணர்த்தாத வரைதனிலும்

எங்கே செல்லும் எதிர்காலம் எனும்
வினாவிற்கு விடையில்லையே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# இருளை மாய்த்த மறுப்பிறவி

இருளின் நிழல்
இமைகளுக்கு தெரியாது.
உடைந்த துவாரத்தில்
உயர்வளி புகுந்திட.
சிறையில் சிக்கிய
சிறுமிக்கோ சுதந்திரம்.
பறவைகள் கூட்டமே
பரவசத்தை காட்டுமே.
சிறுமியின் சிறகினை
சிறைக்குள்ளே முடக்காதே.
புதிய விடியலாய்
புத்துயிர் அளித்திட.
புதுயுகம் படைத்திட
புறப்படு மங்கையே.
புரட்சிகள் முளைத்திட
புதுப்பிறவி எடுத்திடு.
நீண்ட ஆகாயம்
நீளாத யுன்பயணத்தை.
நீண்டு சென்றிட
நின்மகளே வருவாயா.
முடங்கிய காலத்தை
முழுமதியாய் குளிராமல்.
இருளைக் கிழித்த
இருவிழி மலரே.
வெய்யோன் மிளிர்ந்த
பொன்னேற் பொழுதே.
மங்காத தங்கமாய்
மாதங்களில் நிறைந்திட.
மலைமகளே வருவாயா
மருதமாய் நிறைவாயா.
இனியும் தயங்காதே
இருட்டினில் மயக்காதே.



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# உறவுகள்



அத்தை, சித்தி, மாமா
பெரியப்பா,பெரியம்மா
அண்ணன் அக்கா தங்கை
தம்பி எனும் உறவுகள்
இனி வரும் காலத்தில்
இருக்கபோவதில்லை
காரணம் ஒன்றுபெற்றால்
ஒளிமயவாழ்வு என்ற
தீர்மானமே.
எத்தனை பெற்றாலும்
உறவின் அருமையை
உணர்த்தி வளர்த்தாலே
உறவு நிலைக்கும்
பெற்றோரையேப்
பேணாத புத்திரங்களாக
பணத்தின் பின்னோடும்
பிடிவாதப் பிள்ளைகளை
பெற்றோரே உருவாக்கிட
உறவு எப்படி நிலைக்கும்?
பணபலமுள்ள உறவுகளோடே
பழகிடவைத்து படிக்கும் போதே
பண்பைப் புகட்டாமல்
பணம் சம்பாதிப்பதையேப்
போதித்தால் பெற்றோர் கூட
அந்நியராகிவிடுவர்
சொத்து சேர்ப்பதோடு உண்மை
சொந்தங்களையும் சேமிக்கக்
கற்றுக்கொடுத்திட வாழ்வு
செம்மையாக இருக்குமே.

கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# உடலினை உறுதிசெய்

நரம்புகள் புடைக்க
எதிரிகள் தெரிக்க
பார்வையே போதும் படைகள் நடுங்க
உடலை உறுதி செய்
வேகம் கொள்
மோகம் விடு
முயற்சி எடு
பயிற்சி கொள்
தூக்கம் கொள்
ஏக்கம் மற
ஆக்கம் செய்
அழிவை விடு
மனதை மாற்று போர் கொள்ள
உடலை ஏற்று திறம்பட
மனதில் உறுதிகொள் செயல்பட
சிந்தனை கொள் உன்னோடு
செயல்படுத்து பயனோடு
நேரமில்லை துணிச்சலோடு
தூரம் இல்லை சோர்வை விடு
இலக்கை நோக்கி பார்வை இடு
இல்லம் தேடி வாய்ப்பை கொடு
எல்லை இல்லா அன்பை கொடு
எதையும் தாங்கும் இதயம் உன்னோடு
இதயம் இழுக்கும் இரத்தம் உறுதியோடு பாயும்
வயதுமீறி எதையும் செய்தலின்றி ஓயும்
துணிச்சலோடு செயல்படு
துன்பமில்லை ஒன்றுபடு
படைகளை சேர்த்து
தடைகளை உடைத்து
முன்னெடு படையெடு முறையிடு தகர்த்தெறி



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# வாழ்வு

மயிலாடுது
கொடியாடுது
செத்தவன் வீட்டுல குடியாடுது
வந்தவன் வாயில
செத்தவன் செயல் பேச்சாடுது
வெயிலுக்கு நிழல் இட்டான்
மனதுக்கு சிறகு கட்டினான்
விண்ணிலே பாயிட்டு
தூங்க நினைத்தான்



புவியீர்ப்பு விசையால்
வாயில் வாய்க்கரிசி
விழுந்தது என்பதை
இவன் மறந்தான்
ஓட்டமும் உழைப்புமாய்
இவன் இருந்தான்
கண்டது கொண்டது
எல்லாம் இவனது என்றான்
பிரம்மாண்ட சூரியனை
மென்மையான மேகம் மறைத்து
இருள் தரும் என்பதை
இவன் மறந்தான்
யார் வீடு இவனுக்கடுத்து
அவன் அடங்கிய
மண் வீடு.

கவிஞர் ஹஸன் எம் பஜீத்,இலங்கை

# வெற்றி நிச்சயம்

தோல்விகள்,ஏமாற்றங்கள்,நிராகரிப்புகள் கண்டு
துவளாதே எழுந்து வா

வற்றாத நதியாய் ஓடிக்கொண்டே இரு
வெற்றி நிச்சயம்

எட்டவில்லையென்பதற்காக கிடைக்காதென நினைக்காதே
எட்டாக்கனிகளெல்லாம் புளிக்குமென்பது என்றும் பொய்தானே

பாதைகள் மாறினாலும் பயணத்தை மாற்றாதே
தடைகள் தாண்டி பயணித்திடு வெற்றி நிச்சயம்

உன் வாழ்க்கைக்கு நீதான் சிற்பி உன்னை நீயே செதுக்கு
உனக்கு நீதான் ஓவியன் நீயே வரைந்திடு



காயங்கள் இல்லாது கனவுகள் அடையமுடியாது
காயங்கள் கண்டு கலங்காதே,
நம்பிக்கையுடன் அடுத்த அடியை வெற்றி நிச்சயம்

வரலாறு படைத்தவர்களின்
வரலாற்றைப் புரட்டிப்பார்
வெற்றியின் இரகசியம் புரியும்

முடிந்து விட்டதென்று முற்றுப்புள்ளி வைக்காதே,
தொடர்ந்து கொண்டே இரு வெற்றி நிச்சயம்

முடியாதென்பது முடிவில்லை இங்கு
நம்பிக்கையுடனும் ,முயற்சியுடனும்
நகர்ந்து கொண்டே இரு வெற்றி நிச்சயம்

கவிஞர் சனூபா தாஹிர்,இலங்கை

# பெண்மை வெல்க

பெண்ணே நீயும் பட்டமாக
உயர வேண்டும் எனில்
பட்டம் பெறும் வரை பதட்டம் இன்றியே படி.
பார் போற்றும் உலகில் பரவசமாய்
நீயும் நெஞ்சை நிமிர்த்தி நட.
உன் அழகை மெச்சும் மனிதர்களை
துச்சமென தூரமிடு.
உன் அறிவை வளர்க்கும் ஆற்றலையும் பெறுக்கும்
செயல்களை மட்டுமே நீ அனுதினம் கை கொள்.
உன்னை நீ அறிந்தால் தெளிந்தால்
புரிந்தால் உலகம் உன் பின்னால்.
இது புரிந்தால் பெண்மை வென்று
என்றும் வெற்றி கொடி நாட்டிடுமே



கவிஞர் சிவானி,அனகாபுத்தூர் 70

# சோதனை வலிகளே சாதனை வழிகள்

எதிர்ச் சொற்கள் இணைந்த முறையிலே
புதிர் முட்கள் நிறைந்த தரையிலே

நல்லவர்க்கு ஆங்கே எதிராய்க் கெட்டவர்
இல்லாமல் இல்லை சதியை நட்டவர்




தீது செய்து மதியால் விதியை
நீதம் இன்றிப் பதிக்கும் கதியை

சிரம்மேல் கொண்டவர்க்குச் சரம் கௌரவம்
உரமாய் உண்மையாய் உழைப்பவர் தரம் குறைவுறும்

வேசம் இங்கே மேடை ஏறும்
பாசம் வெறும் பாடையே சேரும்

வட்டமிட்டு வாழும் வாழ்வு நட்டமில்லை
திட்டமிட்ட இறை தீர்ப்பு குற்றமில்லை

இவ்வுலக வாழ்வு இறைவனின் சோதனையே
அவ்வளவும் மறு உலகிலுந்தன் சாதனையே



போக வாழ்வு போகுமிடம் நரகமே
போதை அது சாத்தானின் நகரமே

கலங்கிடாமல் ஒழுகிடு நேர்மை வழியே
களங்கமில்லாச் சுவர்க்கமுன் மறுமை நிலையே

காயங்கள் எல்லாம் மாயமாய் ஆகும்
சாயங்கள் அனைத்தும் வெறுமையாய்ப் போகும்

உண்மையின் உன்னதம் உலகம் அறியும்
கண்களால் கண்ட தீமைகள் முறியும்

நிரந்தர இன்பம் உன்னில் தங்கும்
நித்திய உலகு அதுவே எங்கும்

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான் குடி(இலங்கை)

# எழுந்திடு பெண்ணே!

கண்ணீரை துடை! கயவரை உடை!
சரிததிரம் படைக்க வேண்டியள்
சரிந்து போகாதே?
வீரத்தை திறமையில் காட்ட பிறந்தவளே
வீணடிக்காதே உன் காலத்தை
வேடிக்கை மனிதர்களுக்காக



புல்லாங்குழலும் நுண்ணியதே
அதன் திறமையும் உலகு அறிந்ததே
சிலந்தியும் வலை பின்னும்
அற்ப கரையானும் கூடு கட்டும்
இயற்கையும் மேல்லிசை பாட்டாகும்
இறைவனின் அற்புத படைப்பே
ஏனடி இன்னும் தயக்கம்?

உன் திறமையை தேடு
நாள்தோறும் அதனை தீட்டு
கம்பியும் வளையும் - சில
கயவனும் வளைவான்.
நீ வெற்றிச் சிகரத்தில் இருந்தால்.


விசித்திரமான உலகமடி
விநோதமான மாக்களடி - நீ
"சரி" என்று எடுப்பது முடிவு
அவர்கள் அதற்கு வைப்பதோ அழிவு
காரணத்தை தேடாதே! கலங்காதே!
மூடர் கூட்டத்தை நொறுக்க
உன் வீரப்பார்வை போதுமடி

தேவைக்கு மட்டும் எடுத்து பூட்டும்
பொருளாக இராதே
சாதிக்க பிறந்தவள் நீ
அடுத்தவனின் சதிக்கு அஞ்சாதே
துணிந்து செல்! வெட்டுபவரை
தைரியமாக வெட்டிச் செல்

புறப்படு பெண்ணே சரித்திரம் படைக்க
தாமதித்து தாமதித்து தணிந்து போகாதே.
உனக்கும் திறமையுண்டு வெல்வாய்
வீணடித்த காலத்தை விளை
நிலத்தின வித்தாக்கி
எழுந்திடு பெண்ணே.

கவிஞர் ஏ.ஆர்.ரசானா,கல்முனை(இலங்கை)

# வேள்பாரி ஆசிரியருக்கு...




வியப்புகளே வியப்புற்று வியக்கிறதும் வினைத்திறனால்
இயற்றிட்டாய் ஈடில்லா இலக்கியமும் இன்தமிழில்
முயற்சிகளும் முன்நின்று முகிழ்கிறதே முழுநிலவாய்
மயங்கிடுதே மனமதுவும் மதிக்குள்ளே மதுவூற்றும்

எழுத்ததையும் இனிதாக எடுத்தாண்ட எழில்நடையில்
அழுத்தமாக ஆழமாக அந்திபகல் அறியாமல்
விழுந்திட்டேன் வீரயுக வேள்பாரி விதைக்குள்ளே
தொழுகின்றேன் துதிக்கின்றேன் தொடமுடியா தொன்மைகதை

புனைவுகளில் பூத்திருக்கும் புத்துயிரும் புதுமைகளும்
கனவிலுமே கைசேரா கற்பனைகள் கலையாக
தனக்குள்ளே தவமாக தனித்திருந்த தனித்திறமை
அனைத்திலுமே அகப்படாமல் அகத்தினுள்ளே அமர்ந்ததுவே

படித்ததுமே படமாக்கி பார்வைக்குள் படரவிட்டு
முடித்திடுதே மூழ்கடித்து முழுவதுமாய் முத்தெடுக்க
உடுத்திடுதே உணர்வுகளை ஊடுருவி உள்நுழைந்தே
அடுத்தகட்ட ஆவலையும் அடிமனதில் அவிழ்த்திட்ட



கோர்வைகளோ குறைவில்லை கோவிற்கும் கோவான
பார்போற்றும் பாரியவன் பண்புகளை படிக்கையிலே
வார்த்தைகளும் வனப்புடனே வளர்த்திடுதே வகைவகையாய்
நேர்த்தியான நின்படைப்பு நிலைகொண்டே நிற்கிறதே

ஆளுமையின் ஆலமென ஆர்ப்பரிக்கும் ஆற்றலுமே
ஒளிர்ந்திடுதே ஒளியாமல் உன்னதமாய் உள்வாங்க
வெளியிட்ட வேள்பாரி வெறிகொண்டே வீழ்த்திடுதே
களிப்புடனே கரைந்திட்டேன் காவியத்துள் கசிந்துருகி

பருகுகிறேன் பக்கமெல்லாம் பனைவெல்ல பாகினையும்
உருகிடுதே உள்ளுணர்வும் ஓயாமல் உறைந்திருக்க
அருமையான ஆற்றலினால் அகம்தொட்ட அதிசயமாய்
பெருகிடுதே பேருவகை பெயர்சொல்லும் பெருமிதமாய்

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# வாழ்க்கைப் பாடம்

செல்லும் இடமெல்லாம் வாளிலும் கூரிய நாக்கள்.
ஒவ்வொரு வார்த்தையும் நிமிடத்திற்கு ஒருமுறை கொன்றுவிடும்.

இலக்கின் பாதை முழுதும் மானிட முட்கள்.
கடந்ததை திரும்பிப் பார்க்கையில்
சுவடுகள் முழுவதும் காயத்தினாலான தடங்கள்.



கூடவே இருப்பதெல்லாம் குழி பறிக்கும்.
பின்னே ஆறுதல் கூறுவதாய் நாடகம் நடிக்கும்.

அடிப் பட்டுப்பட்டு பழகிப்போகும்.
பச்சை மரத்தில் அடித்த ஆணி போல அனைத்துமே பதிந்து போகும்.

அடுத்தவன் பேச்சு காதினிலே எட்டாது போகும்.
அவமானங்கள் படிப்படியாய் முன்னேறும்.

உன் வாழ்க்கையில் ஒவ்வொரு முடிவுகளையும் சுயமாய் எடுத்திடு.
உனக்காக உன்னையன்றி எவனும் வாழப்போவதில்லை.

சுழலும் உலகம் யாருக்காகவும் நின்றிடாது.
உன் வெற்றிகள் என்றும் குன்றிடாது.

கவிஞர் சன்ஹா நிஜாம்,புத்தளம்

# வற்றாத கேணி வறுமையில்

விலகி நடந்த
அடியணைத்தும்
அணைத்து வந்தது
அருகி வரும் தருணங்களை.

தீப்பெட்டி உள்
திணித்து
இருப்பது போல்
தலைமேல் கனன்று
விழ காத்திருக்கும்
கனம்.
இருள் வெளிச்சத்தின்
குறைவே யன்றி
வெறுமையல்லவே யென
எங்கோ ஒரு குரல் மட்டும்



இருளிலும்
இயற்கை வாசம்
மணப்பது மனமறியும்

கால் இடறிய கல்லை
கரும் இருளிலும்
கண்ணில் ஒற்றிக் கொண்டேன்
இதுவும் ஒருநாள்
கடவுள் சிலையாகலாம்

கிணற்றில் போட்ட
கல்போன்று
மனம் மட்டுமே
முட்டிக்கொண்டு
உருளும்.

வற்றாத கேணி உழைப்பு
வற்றிப்போன மனதின்
வறட்டு கரங்களில்!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# கொஞ்சும் நெருப்பு

கருவில் சுமக்கவில்லை
கண்ணாய்க் காத்து
மார்பிலும் தோளிலும்
மகிழ்வோடு தாங்கினாய்
சுடராய் ஒளிவீசிட
சுமைகள் சுமந்தாய்
கருவிழியாய் கருத்தோடு
காத்து வளர்த்தாய்



விழுந்த வேளை
விருட்சத்தின் வேர்களாய்
தன்னம்பிக்கை ஊட்டி
தளிர்த்திட வைத்தாய்
அச்சங்களைப் போக்கி
ஆளுமை கொடுத்து
குற்றங்களைத் திருத்தி
குறைகளைச் சொன்னாய்

உச்சத்தில் உயர்ந்திட
உரமாக இருந்து
நிச்சயம் வெல்வாய்
நிறைவேற்று என்றாய்
பலத்தை அளித்து
பள்ளிக்கு அனுப்பி
பாடங்கள் கற்கவைத்து
பண்பினைப் புகட்டினாய்

ஆழமான பாசத்தை
அறிந்திடாமல் புதைத்தாய்
விழாக்காலத்தில் தோளிலேற்றி
தேராக வலம்வந்தாய்
கண்டிப்பில் கவனமாய்
கட்டியணைத்து அதட்டியும்
கொஞ்சிடும் நெருப்பாய்
கொள்ளையிட்ட தந்தை

மிஞ்சிய அன்பையும்
தனக்குள்ளே பக்குவப்படுத்தி
அஞ்சிடும் படியாக
ஆணையிட்டுச் சொல்வாய்
தளர்ந்த மனதையும்
தட்டிக் கொடுத்து
தயங்காது போராடி
வெற்றிகொள் என்பாய்

ஓய்வரியாத ஆதவனாய்
ஓடிஓடி உழைத்தாய்
பிள்ளைகள் நலனில்
பிணைந்த பிரியமே
தந்தையெனும் வரம்
தந்திட்ட பொக்கிசங்களாய்
உன்னை இழந்தாலும்
நெஞ்சோடு கொஞ்சுகிறாய்

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# மயங்குகிறேன் நான்

கூடி கூடி வாழ்ந்திடவே
கோடி இன்பம் புரளுமே
கோடி கோடி கொடுத்தாலும்
தெவிட்டாத செல்வமே
அள்ள அள்ள குறையாத அட்சயப்பாத்திரமே
கொஞ்சி கொஞ்சி பேசுகையில்
பட்ட துன்பம் தீருமே
அலை அலையாய் அடித்து செல்லும்
நினைவுகளின் வசந்தமே
மீண்டும், மீண்டும் நெஞ்சில் தங்கும்
இனிமையான தருணமே
தத்தி தத்தி நடக்கையில்
தாவிச் செல்லும் மனமே
பாடிப் பாடி பரவசமாகும்
பசுந்தளிரின் பாசமே
நித்தம் நித்தம் தொடர்ந்து வரும்
விலகாத சொந்தமே
மழலை மனம் மாறாத
உன் சிரிப்பில் மயங்குகிறேன் நாளுமே



கவிஞர் குணசுந்தரி சிவா காஞ்சிபுரம்

# வெட்கம்

வீட்டின் குலக்கொழுந்து
தன் சிலேட்டுப் பலகையில்
விரல் பிடித்து எழுதக்
கற்றுக் கொடுக்க!
இருளாயி என்று தன்
பெயரை எழுத!
சரியாக எழுதி விட்டாய்
உன் பெயரை என்று
பேரன் சொல்ல
பொக்கை வாய் கிழவிக்கு
வந்தது வெட்கம்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.73

# நமிநந்தியடிகள் நாயனார்

பெருமை விளங்கும் காவிரிக் கரையில் அமைந்த ஊர் ஏமப்பேர்.
ஒருமை நெறி வாழ் அந்தணர் சிவனடியாராக வாழ்ந்து வந்தார்
இருமை உலகும் காக்கும் ஈசனை சிந்தையில் வைத்திருந்தார்
அருமை புரிவார் அவர் நமிநந்தி அடிகள் என்பார் ஆயினர்

இரவும் பகலும் சிவாய நமவே நீங்கா இன்பம் என்றுணர்ந்தார்
திரு நீறு அணிவதே வாழ்க்கையின் பொருள் என்று நினைத்தார்
வரம் தரும் திருவாரூரான் அருள் பெற விரும்பினார் நந்தியடிகள்
பரமனின் திருப்பாதங்களை வணங்க திருவாரூர் வந்தார்



சிவபெருமான் வீற்றருளும் திருக்கோயிலின் உள்ளே புகுந்தார்
தவசிகளுக்கு அருளும் வன்மீகி நாதரை கண்டு தரிசித்தார்
உவமைஇலா பெருமானை உளமாற கண்டு இன்புற்றார்
சிவ சன்னிதிகளை வணங்கி அறநெறி சன்னிதி வந்தார்

மனமெல்லாம் அறநெறியாரை நினைந்து உள்ளே சென்றார்
தனந்தரும் நல்லன எல்லாம் தரும் நெறியான் இருட்டில் தெரிய
சினந்தார் பக்தர்கள் யாரும் உணரவில்லையே விளகேற்ற
கனமான விளக்கில் திரி இருக்கிறது எரிய நெய் இல்லையே

இங்கு தீபங்களை ஏற்றி சன்னிதி ஒளி பெறவேண்டும்
அங்கு உளமார நினைந்து வெளியில் நெய் தேடிச் சென்றார்
எங்கு தேடியும் நெய் இல்லாமல் பக்கத்தில் இருக்கும் வீடு வந்தார்
உங்களிடம் பணிந்து கேட்கிறேன் விளக்கு எரிய நெய் தாரும்

பக்கத்து வீடு சமணர்கள் என்று தெரியாமல் கேட்டு விட்டார்
"திக்கற்றவர் கையில் தீபம் இருக்க விளக்கும் நெய்யும் எதற்கு
வக்கனையாக பேசும் உங்க சிவனுக்கு நெய் எதற்கு வீண்
சக்கையாக கிடக்கும் குளத்து நீரே போதுமே," என்றனர் ஏளனமாக

பதிலைக் கேட்ட நமிநந்தி கூனிக் குறுகி மனம் நொந்து கண்ணீர்
எதிரே ஒலித்தது," கவலை விடு குளத்து நீரே நெய்யாக எரியும் விளக்கு."
எதிரியை முறைத்து முகர்ந்து வந்த நீரை விளக்கில் ஊற்றினார்
அதிசயம் விளக்குகள் எரிய அறநெறியார் சோதியாய் காட்சி தந்தார்
( இராமலிங்க அடிகள் நீரில் விளக்கேற்றியது தெரியும் தானே )
ஆரூர் நகருக்கு மீண்டும் வந்தார் உத்திர விழாவில் ஈசனைக் காண
ஊரில் உள்ள அத்தனை மக்களும் நெருக்கமாக கோயில் வந்தனர்
பேரும் புகழும் பெற்ற ஈசனை தொழுது நடு நிசி அகம் வந்தார்
யார் யாரோ வந்தனர் கூட்டத்தில் ஒருவரோடு ஒருவர் தள்ளு முள்ளு

"நான் பலரையும் தொட்டு தீட்டு ஆனதால் வீட்டுக்குள் வர இயலாது
யான் திண்ணையில் கண்ணயரும் நேரம் குளிக்க நீர் செய்"
வாசலுக்குப் பின் நின்று கேட்ட மனையாள் ஆகட்டும் உள்ளே சென்றாள்
வானில் இருந்து வந்த குரல் கேட்டு துணுக்குற்று கண் விழித்தார்

திருவாரூர் மக்கள அனைவரும் சிவகணங்களே எம் பக்தர்கள் தான்
பெருமானைக் தரிசிக்க வந்தவர்கள் சமரச சன்மார்க்கமே சமமே
ஒருமையில் பிரித்து தீட்டு என வேறுபடுத்தி ஒதுக்குவது எஞ்ஞனம்
ஈசனிடம் மன்னிப்புக் கோரி அவன் அருளால் முக்தி பெற்றார்.

**கவிஞர் ந.திருக்காமு**

# பேரன்புக்காரி

உடல் சோர்ந்த போதும்
உயிர் பருகிட தந்த
உன் பேரன்புக்கு ஈடேது!

உன் இதழ் கவிதை
உண்ட கிறங்கில்
உன்னில் நானும்
என்னுள் நீயும்
நாணம்பூசி
நயம்பட உறைந்தோம்!



செயற்கை ஊட்டல் கூடாதென
உன் உள்ளங்கை ஊட்டிய உணவு
உயிருக்குள் இனிக்குதடி!

கைப்பிடி அன்னம்
கையாலாகாத அடத்தில்
அன்பில் பிசைந்து
உன்னில் அடங்கியது
உயிர் கலக்க
கூடலா முக்கியம்
உருகி நிற்க யாவும்!
உன் கவிதை வாங்கத்தான்
இப்பிறவியென.
எவரோ கேட்ட வரம்
எனக்கு கை கூடியது
வரமாய் இனித்தது!

கவிஞர் ஆர்.மோகன் ராஜ்,சென்னை

# வெட்கம்

தென்னமர ஓலை
வழியே தேன்சிட்டு
எட்டி எட்டி பார்த்தாள்.

என்ன என்று
தலையசைக்க
வெட்கப்பட்டு
ஒளிந்து கொண்டாள்.

மல்லி மொட்டு
பூத்திருக்கு
பறிக்கும் உரிமை
உனக்கு இருக்கு
என்று சிலர்
பரிகாசம் செய்திடவே

வெட்கம் என்னையும்
வந்து ஒட்டிகொண்டதே.



கவிஞர் விக்னேஷ் கலியமூர்த்தி,தஞ்சை

# சிந்தனை



நாதியில்லாதவனுக்கு
போராடு
நீதியில்லாதவனுக்கு
வாதாடு
விதியை நினைத்து
அஞ்சுபவனுக்கு
மதியை தீட்டு
கல்விகற்க வசியற்றவனுக்கு
நிதியை நீட்டு

ஊனம் கொண்டவருக்கு உதவுவது
ஞானம் கொண்டவரிடம் வினவுவது
காதல் கொண்டவரிடம்
உண்மையாயிருப்பது
மோதல் கொண்டவரிடம்
ஊமையாயிருப்பது

பெற்றோரை வழிபடுவது
கற்போர்க்கு வழிவிடுவது
உதவியவரை மறக்காதது
உள்ளோரை வெறுக்காதது

மற்றவர்கள்முன்
குழந்தையை பாராட்டுவது
குழந்தையின்முன்
மற்றவர்களுக்கு மதிப்பூட்டுவது
தவறென்றால் எச்சரிப்பது
அதை
நல்வார்த்தையில் உச்சரிப்பது

உழைப்பதை சேமிப்பது
உதாரணமாய் காமிப்பது
என் அறிவை சோதிப்பது
என் திறமை சாதிப்பது

தாத்தாவிடம் உரையாடுவது
குழந்தையிடம் விளையாடுவது
இருப்பதில் நிறையென்பது
இல்லாததை சரியென்பது

முதல் காதலை மறக்காதது
வரும் காதலியிடம் மறைக்காதது
சோதனை எனக்கானது
சாதனை எனைத்தேடுது

அறுபதில் வரும் ஞானத்தை
இருபதில் அறிவது
இருபதில் வரும் காதலை
அறுபதிலும் தொடர்வது

கவிஞர் சு.வெற்றிவேல்,திருப்பூர்

# ஜுப்ளிக் கடிதம்

காலங்கள் நினைவுகூறும் பொழுது
நம் நிகழ்வுகளும், கடிதங்களும் நினைவு பெறும்.
மீண்டும் ஒருமுறை வணக்கம் ஜூ ரேமா!
இவள் ஓர் புரியாத பூங்குழலி புன்னகைக்கும் தேன்விழி!

இவள் கருங்கூந்தாலும் காற்றை வசப்படுத்தும்.
இவள் வாய்மொழியில் தமிழ்மொழி சிறக்கும்.

உன் அருகினில் இருந்ததோர் கனாக்காலம்! ஜூ_ரேமா
மீண்டும் வருமா!

நீ பலவிதம் ஆனால் என்னிடம் ஒரு விதம்.
உன் அன்புக்கும் ஆதங்கத்திற்கும் என் நன்றிகள்.

உன்னை தொட்ட நினைவுகள் இன்றி
வாழ்க்கையில் நான் இழந்த வரிகள் நன்று ஜூ_ரேமா

மறக்காத நெஞ்சம் மீண்டும் மீண்டும் நினைக்கும் மண்ணில்
மறைந்து போகும் வரை ஜூ_ரேமா

உன் பனிக்கூழ் உதட்டை நான் ருசித்தது ஓர் காலம்.
உன் மடியின் ஓரம் உறங்கியதோர்
நாளும் ஜூ_ரேமா.



பேசிய நாளும் பேசாத நாளும்
சிறிய வம்பு பெரிய அன்பு அன்று.

உன்னிடம் பட்ட கடனை என்னால் அடைக்க முடியவில்லை?
அது அடைக்கும் கடன் அல்ல அன்பு என்னும் மறைத்த கடன்.

மீண்டும் ஒருமுறை வணக்கம் ஜூ_ரேமா
நலம் நலம் அறிய நலம் பெற ஆவல்
என்ன செய்கிறாய் அனைத்தும் அனைவரும் அறிய விரும்புகிறேன்.
நன்றிகளுடன் மீண்டும் உன் நினைவில் ஜூ_ரேமா

உன் அன்பை இன்று நினைத்து அனைத்தும்? மறந்தேனடி ஜூ

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# பொங்கல் கவிதைகள்

## லிமரைக்கூ

1) தமிழகத்தின் தனி விழா
இயற்கைக்கும் சூரியனுக்கும் நன்றி சொல்லும்
தன்னிகரில்லா பண்பாட்டுப் பெருஉலா

2) பழைய துயர்களைப் போக்கி
புத்தாண்டில் நல்துவக்கங்கள் நாடி
நன்றியோடு கொண்டாடுவோம் போகி

## தன்முனைக்கவிதை

சகோதரர்களுக்காக சகோதரிகளின்
கணுப்பிடி நோன்பு
தூய்மையான பாசத்தை
உயிர்க்கும் மாண்பு



## துளிப்பா

வெற்றியின் சின்னம்
பொங்கலுக்கு வீடுகளை அலங்கரிக்கிறது
பூலாப்பூ

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

# பிரியாதே காதலியே

காதல் மலர்
நுகரத் தந்தவளே

உலாவரும் முழுமதியாய்
என்னுள்ளே பதியமானாவளே

திருவாசகம் ஓதிடும்
என் நாவில்

திருமறைச் சுவடியை
முனுமுனுக்க வைத்தாயடி

மதமொன்றும் பெரிதில்லை
மனிதம் போதுமென்றாய்

உன்னோடு பழகுகையில்
நிறைகுடமாய் இருந்தேனே

இப்போது நட்சத்திரமில்லா
வானம்போல் வெறுமையில்

முரண்பட்ட நேசத்தால்
ரணமில்லாமல் வலிக்குதடி

பிரிந்தது போதும்
பிணைந்தே வாழ்வோமே

முடிவுரை எழுதுமுன்னே
பதிலேதும் சொல்லிடு



கவிஞர் லா.பெனிஸ்,திருநெல்வேலி திசையன்விளை

# நூலகம்

இவ்வுலகில் வாழ ஒரு மனிதனுக்கு
உணவு, உடை, உறைவிடம் மட்டும் போதுமா?
மனிதனின் நெற்றிக்கண் அறிவுத் திறவுகோலே!
அந்த அறிவை மேன்மேலும் பெருக்கி நம்மை
உயர்த்தி உலகுக்கு பெருமை படுத்துவதே நூல்களே!
நூல்கள் பல கற்பின் சென்றிடுவோம் எட்டு திக்குமே!
தமிழ் மொழி புத்தகங்கள், பல வேறு நாட்டு மொழியில்
புத்தகங்களை மொழி பெயர்க்க பட்டு வருகிறதே!
அதே போல், பன்னாட்டு மொழியின் புத்தகங்களும்
தமிழ் மொழியில் மொழி பெயர்க்க பட்டு
பயன்பாட்டில் நமக்கு கிடைக்க பெறுகிறதே!
உலகளவில் புகழ்பெற்ற பிராங்க் பர்ட், ஷார்ஜா போன்ற
புத்தக சந்தைக்குப் சென்று நம் தமிழ்நாட்டு
அரசுக்குழு பலப்பல அனுபவங்களை தேனீக்கள்
போல சுறுசுறுப்புடன், மிக குறுகிய காலத்தில் சேமித்து
புத்தக கண்காட்சியை நிறுவியதே!
புத்தக கண்காட்சி சர்வதேச புத்தகங்களின்
அணி வரிசையில் பல அனுபவத்தால் நிறைய
நமக்கு நன்மையோ நன்மையே!
புத்தக மறுமலர்ச்சி நமக்கு புத்துணர்ச்சியே!



நம்நாட்டு எழுத்தாளர்கள், பன்னாட்டு எழுத்தாளர்கள்
மொழி பெயர்ப்பாளர்கள், மற்றும் ஏனைய இதன் தொடர்பாளர்களுக்கும்
அகர,முதல இலக்கிய பேரவையின் சார்பாக நன்றிகள் பல.
தெய்வ புலவர் வள்ளுவ பெருந்தகையின் திருக்குறள்
உலகம் முழுவதும் மொழி பெயர்க்க பட்டதே!
தமிழனின் நெஞ்சை நிமரச் செய்கிறதே!
வாழ்க தமிழ்! வளர்க தமிழரின் தொண்டுகள்!

கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# வருவாய் நீயே மீண்டு

மீண்டு வருவாய்
மீண்டும் வருவாய்
துன்பங்களை விலக்குவாய்
துயரங்கள் துடைப்பாய்
ஏக்கங்களை போக்குவாய்
எழுச்சியுர வைத்திடுவாய்
கண்கலங்கிய எங்களை
கரை சேர்ப்பது நீயே
காலமும் காத்திருக்கு
உன்னை காண
புவியும் புத்துயிர்கொள்ளும்
உன் பாதம் பட்டதும்
நாங்களும் பூரித்துத்
விடுவோம் உன்னாலே
எழுந்து வா சின்னவளே



கவிஞர் முனைவர்.அக.வீரவன்சாரா,சிதம்பரம்

# கவிஞரேறு வாணிதாசன்

தமிழறிஞர்! பாவேந்தர் பரம்பரையே! பெற்றோரோ
மாணரங்கத் திருக்காமு துளசியம்மாள் என்போரே!
இயற்பெயரோ எதிராசுலு என்கின்ற அரங்கசாமி!
புனைபெயர்கள் "ராமி"யதும் "வாணிதாசன்" என்பதுவே!
சிறப்புணர்த்தும் "கவிஞரேறு" "பாவலர்மன் ன்"னென்பதுவே!
"பாவலர்மணி" நற்"புதுமைக் கவிஞரென்று ரைத்திடுவர்!
வயதிருபதில் ஆதிலட்சுமி நற்றுணையை ஏற்றாரே!
ஒன்பதின்மர் பெற்றிட்ட மதலையரே! பண்பாலர்
எழிலி,ஐயை, இளவெயினி, மாதரியும், முல்லையென
ஐவராவர்! ஆண்மக்கள் நக்கீரன் நலங்கிள்ளி
நெடுங்கிள்ளி பெருங்கிள்ளி நால்வராவர்! சேலியமேட்
டிலமைந்த புரட்சியகம் வாழ்ந்திட்ட நன்மனையே!
கற்றுற்றார் பிரென்சிந்திய தமிழ்வித்வான், தமிழினிலே
பிரவேசம், வித்வானும் என்றமைந்த பற்பலவே!
பயிலிடங்கள் பிரென்ச்மொழிதன் பள்ளியதும் கல்வேபேர்
கல்லூரி என்றிடுவர்! நற்றமிழைக் கற்பித்த
ஆசான்கள் எல்லப்பர், நல்முத்துக் குமாரசாமி,
சுப்புரத்தினம் முடியரசன் என்போரே! புதுவைசார்
வில்லியனூர் தோன்றலிவர்! பத்தொன்பது நூற்றமைந்த
பதினைந்தாம் ஆண்டதனில் சூலைதனில் இருபத்து
இரண்டதனில் முகிழ்த்திட்டார்! தாய்மொழியோ தெலுங்காகும்!
ஆசிரியப் பணியாற்றி மாணுற்றார்! தமிழ்க்கவிதை
ஆர்வத்தர்! இவர்கவிதை வெளிவந்த ஏடுகளோ
பொன்னிகாதல், முரசொலியும், முத்தாரம் மன்றமொடு
தென்றலாகும்! தமிழச்சி கொடிமுல்லை தொடுவானம்
காப்பியங்கள்! அகராதி தமிழ்ப்ரென்ச்கை அகரமுதலி
என்பதுவே! படைத்திட்ட நூல்களெனில் எழிலோவியம்
சிரித்தநுணாவும் போன்றவையே! இவர்கவிதை பிரென்ச்உருது
ஆங்கிலத்தில் பெயர்த்தனரே! இவர்நூல்கள் நாட்டுடைமை
ஆயிற்று! மாண்"செவாலியே" விருதுற்றார்! பத்தொன்பது
நூற்றினது ஏழ்பத்து நான்கினது ஆகச்டில்
ஏழாம்நாள் ஐம்பத்து ஒன்பதான வயதினிலே
உதிர்ந்தாரே! சிந்தைசொல் செயலெண்ணப் போற்றுவமே!



**கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)**

# தேடலின் விடை நானே!

சில்லென்ற தென்றலாய்
வேட்கையென சேர
சிலிர்த்த விழிகளும்
அலை மோதுதடா காற்றோடு.

கருவிலே விதைத்த
காதலை கண் முன் தோன்றி
நீ கடக்கும் நொடியெலாம்
கூற முனைகிறேன்.



சற்று செவி சாயடா
சலனமற்ற மழலை வாசம்
நாசி துழைக்க
பிஞ்சு விரல்களால்

வதனத்திலே வரைந்த கோலமாய்
சொக்கி நிற்கிறேன்
உன் குறுநகையில்.
காற்றோடு கதைக்கும் இலைப்போல.

எண்ணற்ற விண்மீனிடையே
நானும் ஒன்றாய் மின்ன
அத்துனையிலும் உன் விழி
எனை தேட.

நாணம் கொண்டு வெட்கி வெட்கி
மிளிர்கிறேன். சற்று உற்று பாரடா.
சாந்தத்திலே சாரீரமாய்
உனை உணர்ந்த எனை போல.

எனையும் நீ உணர்ந்திட
முயற்சிக்கொள் கோன் ஆனவனே.
கணையால் இருதயம் துழைத்து
நுழைந்த உன்னால்.

எனை நெருங்க நீயாய் வாராயோ
வசந்த வாசம் தாராயோ
தாரகை மணம் சுவாசிக்க
மனம் தளர்ந்து தேட முனைந்திடு

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# சுட்டும் விழி சுடர்தான் கண்ணம்மா

ஒற்றை பார்வை வீசுகிறாய்
நாளை பார்ப்போமென
அக்கணமே வெறுமையாய் உணர்கிறேன் நான்.

எப்படி வருகிறது உனக்கு
மட்டும் உறக்கம்.
தலை கோதுவது நான்
என்று உணர்ந்தாயோ.



கனவிலும் என்னை கண்டாயோ
உதட்டோர புன்னகை.
விரல் கலைவது நான்
என்று உணர்ந்தாயோ.

காலை வணக்கம் அனுப்பிவிடு
குறுஞ் செய்தியில்.
வரவில்லை என்றால் புலராது
என் காலை.

இதயம் இரண்டும் பேசிக்கொள்ளட்டும்
விழி மூலம்.
அனுமதி கொடு அவ்வப்போது
காணொளி அழைப்புக்கு.

காலம் மாறலாம் காதல் மாறாது
காதல் பரிமாற ஊடகம் மாறலாம்
உணர்வுகள் மாறாது.

இலக்கிய காதலோ இன்றைய காதலோ
ஏக்கத்துடன் காத்திருக்கும்
காதல் மனங்கள்.
கைக்கூடும் நாளையெண்ணி!

கவிஞர் எழிலி

# ரசிப்பு

இன்னும்
நீண்டு கொண்டே போகிறது
ரசிப்புகளின் பட்டியல்.



ஒய்யாரமாக ஓடியாடி
பூக்களை வருடி
உறவாடிய காற்றையும்
நன்றி தெரிவித்திட
மணம் பரப்பி
தழுவிக்கொள்ளும்
அந்தப் பூக்களையும்
ரசிக்காமல்
இருக்க முடியுமா என்ன ?



அங்குமிங்கும்
சுற்றிச் சுழன்று
ஒருவழியாக ஒன்று கூடி
மயில்களை உசுப்பிவிடும்
மேகங்களையும்
தோகை விரித்தாடும்
மயில்களையும்
ரசிக்காமல்
இருக்க முடியுமா என்ன ?

கரடுமுரடான
பாறைகளை முத்தமிட்டு
மெட்டுகள் கட்டி
மீன்களை வசீகரிக்கும்
நதியையும்
துள்ளிக் குதித்து
விளையாடும் மீன்களையும்
ரசிக்காமல்
இருக்க முடியுமா என்ன ?

தூரத்தில்
வரும் குரல் கேட்டு
சத்தம் தந்திடும்
வாயில்லா சீவனையும்
பசியாற தீவனம் கொடுத்து
தாகம் தணித்து
நேசிக்கும் உழவனையும்
ரசிக்காமல்
இருக்க முடியுமா என்ன ?

இன்னும்
நீண்டு கொண்டே போகிறது
ரசிப்புகளின் பட்டியல்.

கவிஞர் இளங்கோவன் மணியன்

# இலக்கணத் தாத்தா மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை

கட்டுரை



மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை சென்னை, சைதாப் பேட்டை மேட்டுப்பாளையத்தில் 31.08.1896 ல் பிறந்தார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்ற மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் எழுதுவதிலும் இணயற்றவர்.

இறையனார் அகப்பொருள்,தொல்.சொல் (நச்சர் உரை),
தஞ்சைவாணன் கோவை,வீரசோழியம்,
ந ள வெ ண் பா
அஷ்டபிரபந்தம்,யாப்பருங்கலம் காரிகை, யசோதர காவியம் முதலியவை மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை தாமாக முயன்று பதிப்பித்த நூல்கள்.

இலக்கண உலகில் இவர் பதிப்பித்த யாப்பருங்கலக்காரிகை இன்றும் அறிஞர்களால் போற்றப்படுகிறது. இதற்கு இணையான ஒரு பதிப்பு இன்றுவரை இல்லை என்றே கூறலாம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இந்நூலை மீள்பதிப்பு செய்துள்ளது. இவர் பதிப்பாளராக மட்டுமன்றி படைப்பாளராகவும் இருந்துள்ளார்.

பத்திராயு(அ) ஆட்சிக்குரியோர்,திருக்கண்ணபிரானார்
அற்புதவிளக்கு ,குணசாகரர் (அ) இன்சொல் இயல்பு,
அரிச்சந்திர புராணச் சுருக்கம், அராபிக்கதைகள்
முதலியன இவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை. இவை தவிர, அம்பலவாணன்,இளங்கோவன் என்னும் இரு புதினங்களையும் படைத்துள்ளார்.

# இலக்கணத் தாத்தா மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை

கட்டுரை

மொழி செப்பமாக இல்லாவிட்டால் கருதிய எச்செயலும் கருதியபடி நடவாது என்பதை உணர்ந்த மே.வீ.வே. மொழியில் பிழை நேராதபடி எச்சரிக்கையுடன் செயல்பட்டுள்ளார்.காஞ்சிபுரத்தில் "கச்சித் தமிழ்க் கழகம்" என்னும் ஓர் அமைப்பை நிறுவி பலருக்கும் தமிழ் உணர்வை ஊட்டினார்.அத்துடன் சீவகசிந்தாமணி குறித்து நெடியதோர் சொற்பொழிவாற்றினார். அதனால்தான் திரு.வி.க. "சிந்தாமணிச்செல்வர்" என்னும் பட்டமளித்து இவரைப் பாராட்டினார்.

செந்தமிழ்க்களஞ்சியம் , கன்னித் தமிழ்க்களஞ்சியம், கலைமாமணி ஆகிய விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். நியூயார்க் உலகப் பல்கலைக்கழகம் மே.வீ.வே.க்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

கவியரசு கண்ணதாசன் உள்ளிட்ட பலரும் எழுதிய "பாவலர் போற்றும் மகாவித்துவான் மே.வீ.வே." என்னும் தொகுப்பு நூல் இவரது புகழை இன்றளவும் பேசிக்கொண்டிருக்கிறது.

தமிழ் இலக்கிய உலகில் 89 ஆண்டுகள் வரை உலவிய மே.வீ.வே. 4.2.1985 இறைவனடி சேர்ந்தார்.

அ.வில்சன், இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
பட்டை தீட்ட தீட்ட தானே தங்கம் உருவாகும்
அதுபோலவே வாழ்க்கையின் இன்னல்களை
கடந்து வந்தால் மட்டுமே உன் சாதனை
இந்த உலகில் நிஜமாகும்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com